**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

**OS.No.**1001/2023 பெயர்- குமரேசன் நாள்.04.01.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் மார்க்கெட்டில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். பைனான்ஸ் தொழிலும் செய்து வருகிறேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதியும், எனது மனைவியும் உடன் பிறந்த சகோதரிகள் என்றால், சரிதான். தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பு 20.02.2023ம் தேதியிட்ட பாலகிருஷ்ணன் மகன் வெற்றிவேலால் எனக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பா என்றால், ஆமாம். என்னுடைய மைத்துனர் யுவராஜ், என் மனைவி ராதா பெயருக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினாரா என்றால், அனுப்பினார், ஆனால் அது இந்த வழக்கு சம்பந்தப்பட்டது அல்ல, வேறு வழக்கு சம்பந்தப்பட்டது. தற்சமயம் என்னிடம் காட்டப்படும் 12.07.2023ம் தேதியிட்ட வாதியால் எனக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்புதான் வா.சா.ஆ.3 என்றால், சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் நான் வியாபாரத்திற்காகவும், குடும்ப செலவிற்காகவும், அசையா சொத்தை கிரையம் செய்ய வேண்டியும் ரூ.9 லட்சம் கேட்டதாகவும், அதை வாதி கொடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அது பொய். அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நானும், எனது மனைவியும் சேர்ந்து அனுப்பிய 15.07.2023ம் தேதியிட்ட பதில் அறிவிப்புதான் வா.சா.ஆ.4 என்றால், சரிதான். நான் தனிப்பட்ட வகையில் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால், சரிதான், மனைவியுடன் சேர்ந்துதான் அனுப்பியுள்ளேன். மேற்படி வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பில் காசோலையில் உள்ள கையெழுத்தை என்னுடையது அல்ல என்று நான் மறுத்து சொல்லவில்லை என்றால், சரிதான். மேற்படி அறிவிப்பில் நான்

பெங்களூருக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த தேதியில் சென்றேன், எந்த தேதியில் திரும்பி வந்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால், சரிதான். அதேபோல் என்னுடைய மைத்துனர் காசோலையை வீட்டிலிருந்து எடுத்துப்போனதாக சொல்லியுள்ள நிலையில் எந்த தேதியில், எவ்வாறு எடுத்துச்சென்றார் என்று சொல்லவில்லை என்றால், சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் 4வது பக்கம் 3 வது பத்தியில் ஆவணங்களை தேடிப்பார்த்ததாகவும், காணவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள நிலையில், தேதி குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால், சரிதான். மேற்படி ஆவணங்கள் காணாமல் போனது குறித்து என் மாமியாரிடம் கேட்டதாக சொல்லியுள்ள நிலையில் வெற்றிவேலிடம் கேட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். வெற்றிவேல், எனது மனைவி ராதாவிடம் ரூ.1 லட்சம் பணம் கொடுத்தால்தான் மேற்படி ஆவணங்களைத் தருவேன் என்று கூறியதாக சொல்லியுள்ள நிலையில் தேதி குறிப்பிடவில்லை என்றால், சரிதான். எனது மனைவி மற்றும் அவருடைய சகோதரியான இந்த வழக்கின் வாதி ஆகியோருக்கு பாத்தியப்பட்ட பூந்துறையில் இருந்த பூர்வீக சொத்தை விற்று விட்டனர் என்றால், சரிதான். அதில் என் மனைவி ராதா, வாதி ஜெயலட்சுமி, மைத்துனர்கள் வெற்றிவேல் மற்றும் யுவராஜ், மாமியார் ராமலட்சுமி ஆகியோர் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால், சரிதான். காசோலையை என் மைனத்துனர் வெற்றிவேல் திருடிச் சென்று விட்டதாக கூறியுள்ள நிலையில் மேற்படி மைத்துனர் வெற்றிவேலுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால், இல்லை. காசோலையை என் மைத்துனர் வெற்றிவேல் திருடிச் சென்று விட்டதாக கூறியுள்ள நிலையில், மேற்படி மைத்துனர் வெற்றிவேல் மீது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.6, 01.08.2022ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின்படி முருங்கியாம்பாளையம் கிராமத்தில் உள்ள சொத்து என் பெயரிலும், என் மனைவி ராதா பெயரிலும் கிரையம் பெறப்பட்டுள்ளது. 3 ஏக்கர் 10 செண்ட் நிலம் மேற்படி கியைப்பத்திரத்தின் மூலமாக எங்கள் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

அதனுடைய கிரையத் தொகை ரூ.11,05,000/-ம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அது மேற்படி சொத்தின் வழிகாட்டி மதிப்பு என்றால், சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஐப்தி மனு இடை நிலை மனு எண்.2/2023ல் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனு உரையில் மேற்படி சொத்தின் மதிப்பு ரூ.1 கோடியே 50 லட்சம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். பொதுவாக பத்திரத்தில் சொத்தின் வழிகட்டி மதிப்பு குறிப்பிடப்பட்டு அதன் அடிப்படையில் முத்திரைத்தாள் கட்டணம் செலுத்தப்படும் என்றாலும், சந்தை மதிப்பு வழிகாட்டி மதிப்பை விட அதிகமாக இருக்கும் என்றாலும், சரிதான். தற்சமயம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 வில்லங்க சான்றின்படி மேற்படி 01.08.2022ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள முருங்கியாம்பாளையம் கிராமத்தில் உள்ள சொத்து எந்த வில்லங்கமும் இன்றி என் பெயரிலும் என் மனைவி ராதா பெயரிலும் உள்ளது என்றால், சரிதான். மேற்படி சொத்தை கிரையம் பெறுவதற்காகத்தான் நான் 28.07.2022ம் தேதியன்று என் மனைவியின் சகோதரியான வாதி ஜெயலட்சுமியிடம் ரூ.9 லட்சம் கடனாக பெற்றேன் என்றால், சரியல்ல. 20 ரூபாய் பத்திரத்தாள்களில் வெற்றுக் கையெழுத்து போட்டு வைத்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் யாருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்தோம் என்று குறிப்பிடவில்லை என்றால், சரிதான். என் மீது என்னுடைய மைத்துனர்கள் வெற்றிவேல் மற்றும் யுவராஜால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஈரோடு குற்றவியல் நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். மேற்படி சொத்தை கிரையம் பெறுவதற்காகத்தான் நான் மேற்படி நபர்களிடம் கடன் வாங்கியுள்ளேன் என்றால், சரியல்ல. அதனால்தான் காசோலையை திருடிச் சென்று விட்டதாக கூறியுள்ள போதிலும் அது குறித்து புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. காசோலையை திருடிச் சென்று விட்டதாக கூறியுள்ள நிலையில் மேற்படி காசோலையை பொறுத்து வங்கிக்கு கடிதம் எதுவும் எழுத்துப்பூர்வமாக கொடுக்கவில்லை என்றால், சரிதான், வாய்மொழியாக சொன்னேன். என்னிடம் மொத்தம் எத்தனை காசோலைகள் கைவசம் இருந்தது, அதில்

எத்தனை காசேலைகள் திருடப்பட்டது என்ற விவரங்கள் குறிப்பாக பதில் அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை என்றால், 4 காசோலைகள் எடுத்து செல்லப்பட்டு விட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். என் அம்மாவின் பெயர் மரகதம். என் அம்மா மரகதத்தின் பெயரில் சக்ரா டிரேடர்ஸ் என்ற வணிக நிறுவனம் இயங்கிக் கொண்டு வருகிறது என்றால், இல்லை. மேற்படி நிறுவனத்தை நான் நடத்திக் கொண்டு வருகிறேன் என்றால், சரியல்ல, சக்ரா பைனான்ஸ் என்ற பெயரில் என் அம்மாவின் பெயரில் பைனான்ஸ் நடத்தி வருகிறேன். என் அம்மாவிற்கு தர வேண்டிய பணத்திற்காக வாதி ஜெயலட்சுமியின் சகோதரரான யுவராஜின் தனிப்பட்ட சொத்து ஜப்தி செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கிற்கு பின்னிட்டு என்னுடைய ஆலோசனையின்பேரில் என் அம்மா மேற்படி வழக்கை தாக்கல் செய்து நடவடிக்கை எடுத்துள்ளார் என்றால், சரிதான். வாதி ஜெயலட்மியிடம் நான் பெற்ற ரூ.9 லட்சம் கடன் தொகைக்காக மேற்படி வழக்கு காசேலையை நான் வாதிக்கு கொடுத்தேன் என்றாலும், மேற்படி காசோலை மற்றும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று நான் மறுதளிக்காத நிலையில் மேற்படி தொகையை வாதிக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால், சரியல்ல. என்னுடைய சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால், சரியல்ல.